www.padippakam.com

பந்த் சிறப்பிதழ்

# தொழிலாளர் பாதை

DM 1,-

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

★ இதழ் எண் 24 ★ ஜுலை—ஆகஸ்ட், 1989 ★

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் அறிக்கை 23-8-89

# முழு வர்க்க பலத்தையும் அணிதிரட்டி 30ம் தேதி பந்தை நாடு தழுவிய கால வரையற்ற பொதுவேலை நிறுத்தமாக்கு!

## ★ சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான உறவை முறித்துக்கொண்டு சோசலிச வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி!

## ★ சோவியத்துக்களை ஆட்சியமைப்புக்களாக அமைக்கப் போராடு!

ஸ்டாலினிச மார்க்சிசக் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் தொழிற்சங்க மையங்களும், விடுத்துள்ள ஆகஸ்ட் 30ம் தேதி அகில இந்திய பந்தில் முழுத் தொழிற்சங்க இயக்கமும், மற்றும் தொழிலாள வர்க்க இயக்கங்களும் தொழிலாள வர்க்கத்தின் முழு வர்க்க பலத்தை அணிதிரட்டிப் பங்கு கொள்ளுவதோடு அதனைக் காலவரையற்ற அகில இந்திய பொதுவேலை நிறுத்தமாக மாற்றி, ராஜீவ்காந்தி அரசாங்கத்தை மட்டுமல்லாது முழு முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியையும் — அதன் ஏனைய பிரதிநிதிகளின் ஆட்சியையும் வெளியேற்றுமாறு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர்கழகம் அழைக்கிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் நாற்றமெடுக்கும் அரைப்பிணத்திலிருந்து அதன் அரசு, அதன அரசியல் கட்சிகளில் இருந்து தன்னைத் துண்டித்து ஒரு சுதந்திரமான வர்க்கமாக தனது வர்க்க சர்வாதிகாரத்தை பல கோடி விவசாயிகளுடன் கூட்டமைத்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதாகும். அதாவது தொழிலாளர்விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப்போராடுவது ஆகும்.

முதலாளித்துவம் உண்டாக்கும் இன்னல்கள், மனிதச் சீரழிவு, ஒடுக்குமுறை என்பனவற்றிற்கு எதிராக வளர்ந்து உக்கிரம் அடைந்து வரும் தொழிலாள வர்க்கத்தினதும், ஏழை விவசாயிகளினதும் மற்றும் ஒடுக்கப்படும் பரந்த மக்களினதும் புரட்சிகரஎழுச்சியைப் பயன்படுத்தி ஆட்சியில் உள்ள டாட்டாக்கள், பிர்லாக்களின் ஒருபிரதிநிதிக்குழுவைஅகற்றி அதன் இடத்தில் டாட்டாக்கள் பிர்லாக்களின் பிரதிநிதிகளின் மற்றொரு குழுவை1977ம் ஆண்டில்போல ஆட்சி பீடத்தில் ஏற்றுவதல்ல தொழிலாளவர்க்கத்தின் பணி. அதாவது ஆட்சியில் இருந்து ராஜீவ்காந்தியையும் அவரது இந்திரா காங்கிரசையும் அகற்றி, அவர்களின் இடத்தில் ஆட்சியில் வி.பி சிங்குகள், தேவிலால்கள் ராமராவ்கள், கருணாநிதிகள் கூட்டை ஏற்றி தொழிலாள வர்க்கத்திற்கும், ஏழை விவசாயிகளுக்கும், ஒடுக்கப்படும் பரந்த மக்களுக்கும் எதிராக முதலாளித்துவ போலீஸ், ராணுவத் தாக்குதல்களையும், கதவடைப்புகளையும், சீரழிவுகளையும்அவர்கள்மேலும் திறம்படகட்டவிழ்த்துவிடப்போராடுவது அல்ல தொழிலாள வர்க்கத்தின் வர்க்கப்பணி.

இந்தியாவில் உள்ள தொழிலாளர்களின் வர்க்கப்பணி அவர்கள் கோடானு கோடி பலம் படைத்த சர்வதேசப்பாட்டாளி வர்க்கத்தின் படைகளுடன் சர்வதேச ஐக்கியத்தை இறுக்கமாக உருவாக்கி, ஸ்டாலினிச சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை அவைமுதலாளித்துவக் கட்சிகளுடன் அமைத்திருக்கும் கூட்டை உடைத்து, ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம அமைக்க ஆகஸ்ட் 30ம்தேதி பந்தை, காலவரையற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தமாகமாற்றும்படி நிர்ப்பந்திக்கவேண்டும். அந்த அரசாங்கம் முதலாளித்துவ உடைமையாளர்களுக்கு நஷ்டஈடின்றி அனைத்துஆலைகளையும் வங்கிகளையும், நிலங்களையும், தொழிலாளர்ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும். அனைத்து ஏகாதிபத்தியவங்கிக்கடன்களையும்ரத்துச்செய்யும், தமிழ்ஈழம் நாகலாந்து, மணிப்பூர்போன்ற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளை நடைமுறையில் உறுதிப்படுத்தும், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளைத் தமிழ் ஈழத்திலிருந்தும், மாலத்தீவிலிருந்தும் நிபந்தனையின்றி உடனடியாக வாபஸ் பெறுவதுடன் ஏகாதிபத்தியம் தீட்டிய இந்திய இலங்கை ஒப்பந்தத்தைரத்துச் செய்யும் நாட்டுப்புறக் கடன்கள் அத்தனையையும் தள்ளுபடி செய்யும், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலை வழங்கும், உழுபவனுக்கு நிலத்தை வழங்கும், உபகண்ட ரீதியாக நதிகளை இணைக்கும் நீர்ப்பாசனத் திட்டத்தைஆரம்பித்து வெள்ளங்களுக்கும், வறட்சிகளுக்கும்முடிவுகட்டும், அனைத்து மொழி, மற்றும் சிறுபான்மையினரின் அடிப்படை ஜனநாயகஉரிமைகளை உறுதிப்படுத்தும், முதலாளித்துவ அரசயந்திரத்தின் போலீஸ் மற்றும் ஆயுதப்படைகள் அனைத்தையும் கலைத்து அவற்றின் இடத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளின் சோவியத்துகளின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் விவசாயிகளின் படைகளை அமைக்கும், 1947ல் ஏகாதிபத்தியம் செய்த இந்தியஉபகண்டகூறுபோடலைத் தகர்த்து உலக சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாக இந்திய உபகண்டத்தின் சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தை அமைக்கும்.

''ராஜீவ்காந்தி அரசாங்கத்தை வெளியேற்று!'' என்ற

படிப்பகம்

www.padippakam.com



முழக்கத்தை ஸ்டாலினிச சி.பி. எம், சி.பி.ஐ. தலைவர்கள் அகில இந்தியபந்தின் முழக்கமாகவும், இலக்காகவும் ஆக்கியுள்ளார்கள். ராஜீவ் காந்தி அரசாங்கத்தை வெளியேற்றத் தொடுக்கும் போராட்டத்துடன் அதற்கான மாற்று ஒன்றைக் கட்டும் பணியைப்பிரிக்க முடியாது என்று கூறிய நம்பூதிரிப்பாட்டுகள் ''இடதுசாரி ஜனநாயகமதசார்பற்ற கட்சிகளின் அரசாங்கத்திற்கான'' அவர்களின் முயற்சிகளையும் முடுக்கி விட்டுள்ளார்கள்.

இது இன்று வேறு எதுவும் அல்ல ஆனால் வி.பி.சிங்குகள் தேவிலால்கள், ராமாராவ்கள், கருணாநிதிகள் மற்றும் ஸ்டாலினிச சி பி எம் , சி. பி ஐயின் அரசாங்கத்திற்கு ஸ்டாலினிஸ்டுகள் ஒட்டியுள்ள மற்றுமொரு லேபிளாகும்.

ஸ்டாலினிஸ்டுகளின் அரசியல் ஆதரவுடன் முதலாளித்துவ ''தேசிய முன்னணி'' கட்சிகளின் அரசாங்கம் ஆயினும் சரி அல்லது இந்த முதலாளித்துவக் கட்சிகளினதும், ஸ்டாலினிசக் கட்சிகளினதும்கூட்டுஅரசாங்கம்என்றாலும் சரி அதுஒன்றில் 1977ல் ஆட்சி ஏறிய வலதுசாரி ஜனதா அரசாங்கம் போன்றோ அலலது இன்று மேற்கு வங்கத்தில ஊழல் புரையோடி போலீஸ் அடக்குமுறைதலைவிரித்தாடு, மண்ணெண்ணெய்க்காகக் காத்து நிற்கும்மக்களின்நீண்டவரிசைகள் நிறைந்து, நூற்றுக் கணக்கணக்காகக் கதவடைப்புகள் பெருகிக்கொண்டிருக்கும் மாநில ஆட்சி போன்றதே மத்தியில் வரும்.

இந்தியாவில்ஸ்டாலினிசகம்யூனிச கட்சித தலைமைகள் 1942ல் சுதந்திரப் போராட்டத்தைக்காட்டிக்கொடுத்ததற்காக ஆகஸ்ட் கருங்காலிகள் என்று அவப்பெயர் எடுக்கும் முன்பாகவும், மீண்டும் 1947ல் இந்திய உபகண்டம் முழுவதும் திரண்டெழுந்த தொழிலாள வர்க்கத்தின்புரட்சிகரஅலையை முறியடிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், இந்திய முதலாளித்துவமும் வகுப்புவாத ரீதியில் தொழிலாள வர்க்கத்தைபிளவுபடுத்த ஏற்படுத்திய பிரிவினைக்கு ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித்தலைமைகள் ஆதரவளித்ததற்கு முன்பாகவேஇந்தியப்புரட்சிக்கு ஸ்டாலினிஸ்டுகளால் ஏற்படும் அபாயத்தைப் பற்றி நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரானலியான் டிராட்ஸ்கி இந்திய தொழிலாளர்களுக்கு 1939ல் எழுதிய பகிரங்க கடிதத்தில் பின வருமாறு எச்சரித்தார்.

''பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவவர்க்கத்துக்கும் இடையிலான கூட்டிலதலைமை தவிர்க்க முடியாதபடி வலதுசாரிகளின் கைகளுக்கு செல்கிறது. அதாவது சொத்துள்ள வர்க்கங்களின் கைகளுக்குள்... முதலாளித்துவ வர்க்கத்துடனான கூட்டு ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிகர போராட்டத்தை பாட்டாளி வர்க்கம் கைவிட வழிவகுக்கும் கூட்டுக்கொள்கை அர்த்தப் படுத்துவது நேரத்தை கணிப்பதும், காலம் கடத்துவதும், பொய்யான எண்ணங்களை உண்டு பண்ணுவதும், நேர்மை அற்ற திட்டங்களும், சதிகளும்ஆகும் இந்தக் கொள்கையின் விளைவாக, தொழிலாளமக்கள்மத்தியில் தவிர்க்க முடியாதபடி, விரக்தி ஏற்படுகிறது. அதே சமயம் விவசாயிகள் தொழிலாளர்களுக்கு புறமுதுகு காட்டியவாறு சோர்வடைகின்றனர், ஜெர்மன் புரட்சி, ஆஸ்திரியப் புரட்சி,சீனப்புரட்சி, ஸ்பானிய புரட்சி அனைத்துமே கூட்டுக் கொள்கையின் விளைவாக நாசமாகின அதை ஒத்தஅபாயம் இந்தியப்புரட்சியை அச்சுறுத்துகிறது. அங்கே ஸ்டாலினிசவாதிகள் ''மக்கள்முன்னணி'' என்ற போர்வையின் கீழ் பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கத்திற்கு கீழ்ப்படுத்தும் கொள்கையை முன் வைக்கின்றனர். செயலில் இது அர்த்தப்படுத்துவது புரட்சிகர விவசாய வேலைத் திட்டத்தை நிராகரிப்பதும், தொழிலாளர்களை ஆயுதபாணியாக்க மறுப்பதும், ஆட்சிக்கான போராட்டத்தை நிராகரிப்பதும், புரட்சியை நிராகரிப்பதும் ஆகும்''. இன்று சர்வதேச சந்தையில் பிரதான ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளுக்கு (அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா) இடையில் நடக்கும் போட்டியும், தொழில்நுட்பமற்றும்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி அனைத்துமே இன்று உலக அளவில் போருக்கான நிலைமைகளையும், ஆலை மூடல்களையும், ஆட்குறைப்புகள், சம்பள வெட்டுகள், தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படல், விலைவாசியேற்றம் போன்றவற்றை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு இருக்கையில் வேலை செய்யும் உரிமையை இந்த முதலாளித்துவ அரசியலமைப்பினுள் அடிப்படை உரிமையாக்குவதன் மூலமாக முதலாளித்துவ பொருளாதார விதிகளினால் ஏற்படும் வேலை அழிப்புகளை தடுக்க முடியும் என்றும் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கமுடியுமென்றும்முதலாளித்துவ தேசிய முன்னணியின் தலைவரான வி. பி. சிங் உடன்இணைந்த ''மார்க்ஸிய'' நம்பூதிரிபாத்துகள்குரல் எழுப்பி பித்தலாட்டம் செய்கின்றனர். உண்மையில் இவர்கள் வேலைசெய்யும்உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்று பேசுகையில், இன்று கூர்மை அடைந்து வரும் வர்க்கப்போராட்டத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும்போது, கருங்காலிகள் தமது ''வேலை செய்யும் அடிப்படை உரிமையை'' பேணி வேலைநிறுத்தப் போராட்டங்களை உடைப்பதற்கே நாசுக்காக வழிசெய்கின்றனர் ஒரு புறம் ''நாட்டைக் காப்பதே தேசிய முன்னணியின் புது லட்சியம்'' என்றுவி.பி சிங்கும் ''எதிர்க் கட்சிகளை ஓரணியில் திரட்டவேண்டுமாயின் நாட்டைக் காக்கவேண்டும் என்ற பிரச்சனையைத்தவிர வேறு எந்த எந்தப்பிரச்சனையையும் முன் வைக்கமுடியாதுஎன்றுபாரதிய ஜனதா கட்சித்தலைவர் வாஜ்பேயி மறுபுறமும், இன்னொரு புறம் எதிர்க்கட்சிகள் பிரிவினைவாத வகுப்புவாத பழமைவாத சக்திகளை ஆதரிக்கும் தேசத்துரோகிகள்'' என்று ராஜீவ் காந்தியும் முழக்கமிடுகையில் தேசப்பற்றிலும் தேசிய ஒற்றுமையிலும் தாம்எவ்வகையிலும் முதலாளித்துவ கட்சிகளுக்கு இளைத்தவர்கள் அல்ல என்று கூறியவாறு தேசஒற்றுமையை பேண நாம் இரத்த தியாகம் செய்யத்தயாரென்று போட்டி போட்டுக்கொண்டு சி பி.எம்., மற்றும் சி.பி.ஐ தலைமைகளும் அவற்றின் இளைஞர் அமைப்பு தலைமைகளும் பிற்போக்கு தேசியவெறியை நாளாந்தம் வாந்தி எடுத்து வருகின்றன.

''கம்யூனிஸ்டுகள் தாய் நாட்டையும் தேசியத் தன்மையையும் இல்லாதொழிக்க விரும்புகின்றனர்'' என்று முதலாளித்துவ வர்க்கம் குற்றம் சாட்டிய போது அதற்கு கம்யூனிச மூலவர்களான மார்க்சும் ஏங்கெல்சும் அளித்த பதில் : 'தொழிலாளர்களுக்கு தாய்நாடு இல்லை. அவர்களிடம் இல்லாத ஒன்றை அவர்களிடமிருந்து பிடுங்குவது முடியாத காரியம். பாட்டாளி வர்க்கம் யாவற்றுக்கும் முதலாய் அரசியல் மேலாண்மை பெற்றாக வேண்டும். தேசத்தின்தலைமையான வர்க்கமாய் உயர்ந்தாக வேண்டும். தன்னையே தேசமாக்கிக் கொள்ளவேண்டும்'' (கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை' மாஸ்கோ பதிப்பு பக்கம் 74) என்பதாகும்.

வர்க்கப் பகைமையுள்ள தேசத்தில் முதலாளித்துவத்துவ வர்க்கம் பொதுவாக 'தேசம்'' என்று பேசுகையில், அவர்கள் கருத்தில் கொண்டு பேசுவது தமது சுரண்டல் நிறைந்த தேசத்தை பற்றியும் தமது வர்க்க நலன்களை காப்பது பற்றியுமாகும். இந்த தேசத்தை'' காக்கும் கோரசில் ஸ்டாலினிச சி.பி.எம., சி பி, ஐ. மற்றும் மாவோவாத தலைமைகளும் சேர்ந்தது தற்செயலானது அல்ல. 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற பிற்போக்கு கொள்கையுடன் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் சோவியத் யூனியனில் முன்னெடுக்கப்பட்ட மார்க்சிய விரோத நிலைப்பாடு, உலகப் பாட்டாளி வர்க்கத்தை காட்டிக் கொடுத்தது மட்டுமின்றி அக்டோபர் புரட்சியின் வெற்றிகளையும் அழிக்கும் முயற்சியில் முதலாளித்துவ சந்தை பொருளாதாரத்தின் ''மேன்மையை'' பற்றி புகழ்பாடி சோவியத் யூனியன், சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறையையும் முதலாளித்துவ தனிச்சொத்துடைமையையும் மீண்டும் கொண்டுவர ''அயராது உழைக்கின்றனர்'';

இதற்கேற்றாற்போல் சர்வதேச ரீதியாக ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள், சோசலிச வேலைத்திட்டங்களுக்காக போராடுவது இன்றைய யதார்த்த மல்ல, பதிலாக திவாலடைந்த முதலாளித்துவ அமைப்பு முறையினால் ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளுக்கு தொழிலாளர்களை பலியாக்குவது மட்டுமே சாத்தியமானது என்று அவர்களது நடைமுறை கொள்கையில் எடுத்துக்காட்டி வருகின்றனர்.

இந்த துரோக ஸ்டாலினிச தலைமைகளுக்கும் ஏனைய தொழிலாள வர்க்க துரோகத் தலைமைகளுக்கும் எதிராக தொழிலாளர்களை சர்வதேச ரீதியாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், டிராட்ஸ்கி காட்டிய வழியில் ஒரு சர்வதேச புரட்சி கட்சியின் தலைமையின் கீழ் அணிதிரட்டி ஏகாதிபத்தியத்தையும் அதன் தேசிய முதலாளித்துவ, ஸ்டாலினிச, சமூக ஜனநாயக வாத, பப்லோவாத ஏஜண்டுகளையும் தூக்கி வீசி ஒரு திட்டமிட்ட உலக சோசலிச பொருளாதாரத்தை அமைக்க போராடி வருவது உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு மட்டுமே.

1947ல் இந்திய உபகண்டத்தில் திணிக்கப்பட்ட வகுப்புவாத அரசுஅமைப்புமுறையை தூக்கிவீசி, மீண்டும் இந்திய உபகண்ட தொழிலாளர்களை பாட்டாளி வர்க்கசர்வதேசியத்தின் அடிப்படையில் ஒன்றுதிரட்டவும், உலக சோசலிச புரட்சியின் ஒரு பகுதியாகஇந்திய உபகண்டத்தில் ஐக்கிய சோசலிச குடியரசுகள் அமைக்கவும், டிராட்ஸ்கியின் நிரந்தரம் புரட்சி தத்துவத்தின் அடிப்படையில் சோசலிசத்தொழிலாளர் கழகம் போராடி வருகிறது.

தொழிலாள வர்க்கம் அதன் அடிப்படைஉரிமைகளைப் பேண முதலாளித்துவ வர்க்கத்தில் இருந்து முழுமையான சுதந்திரத்துடனும் அதற்கு எதிராகவும் போராட வேண்டும். ஆனால் இன்றைய உலக முதலாளித்துவ நெருக்கடியின்மத்தியில் தொழிலாளவர்க்கஇயக்கத்தில் உள்ள ஸ்டாலினிசத் தலைமைகளோ, தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான அணிதிரட்டலை விடுத்து, முதலாளித்துவத்துடன் அதனை முடிச்சுப்போடும் வேலையைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

மூன்றும் அகிலத்தில் அப்போது தலைமையிலிருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் தொடங்கி வைத்த இத்தப் போக்கைப்பற்றி, நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரான டிராட்ஸ்கி இடைமருவுவேலைத்திட்டத்தில் பின்வருமாறுகுறிப்பிடுகிறார். ''அகிலமானது: (ஸ்டாலினிச அதிகாரத்துவத் தலைமையின் கீழ் மூன்றும் அகிலம்) சீரழிந்து செல்லும் முதலாளித்துவ சகாப்தத்தில் சமூக ஜனநாயகத்தின் பாதையை பின்பற்றத் தொடங்கியுள்ளது. ஆனால் பொதுவாக, அங்கே வரிசைக்கிரமமான சமூக சீர்திருத்தங்கள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை, பாட்டாளி வர்க்கத்தின் ஒவ்வொரு முக்கிய கோரிக்கையும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு முக்கியகோரிக்கையும் தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவ சொத்து உறவுகளின் மற்றும் முதலாளித்துவ அரசின் எல்லைகளுக்கு அப்பால் செல்கிறது!

நான்காம் அகிலத்தின்தொலை நோக்கு பணிமுதலாளித்துவத்தை சீர்திருத்துவதில் அல்ல. அதைத் தூக்கி வீசுவதிலேயே உள்ளது. அதனுடைய அரசியல் நோக்கம் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து அபகரிப்பதற்காகபாட்டாளிவர்க்கத்தின் ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்துவது ஆகும்'' (இடைமருவு வேலைத்திட்டம் 1938பக்கம் 4, லேபர்பப்ளிகேஷன்ஸ்) எனவே வர்க்கநனவுள்ள தொழிலாளர்களே! ஏழை இளைஞர்களே ! விவசாயிகளே ! மார்க்சிசத்திற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் இணையுமாறு உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறோம்.

## சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேருங்கள்!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவின் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் உறுப்பினர் ஆகுங்கள் !

பெயர்.........................................................

முகவரி.........................................................

.........................................................

நிரப்பிய பின் அனுப்ப வேண்டிய முகவரி :
தபாற் பெட்டி எண் 968,
பெரம்பூர் பாராக்ஸ் சென்னை-600 012.

புதிய சந்தா விபரம்;

| | நேரில் | தபாலில் |
|---|---|---|
| ஆறுமாத சந்தா ( 6 இதழ்கள் ) | 6-00 | 7-50 |
| ஆண்டுச்சந்தா (12 இதழ்கள்) | 12-00 | 15-00 |

பெயர்.........................................

முகவரி.........................................

தொடர்புக்கு : எஸ். சக்தி, தபாற்பெட்டி எண் 968,
பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-600012.


லியான் டிராட்ஸ்கி

உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு உலகத் தொழிலாளர்களை அணிதிரட்ட ஒரு புரட்சிகர சர்வதேசிய முன்நோக்கை ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன்,இத்தாலி,ரஷ்ய, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிட்டு உள்ளது.

தமிழ்ப்பதிப்பு விலை ரூ.4 /

# ஈழத்திலிருந்து மாலத்தீவிலிருந்து, இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ் வாங்கப் போராடும்படி ஸ்டாலினிச சி. பி. எம், சி. பி. ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி!

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக S. சக்தி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு S. சுந்தரம் அவர்களால் சுந்தரம் பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான ஒரு ஆத்திரமூட்டல்

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேற்கு-ஜேர்மன் கிளையினால் 'தேனீ'க்கு ஒரு பதில். ஓகஸ்ட் 11, 1989.

ஸ்டுட்காட்டிற்கு (STUTTGART) அண்மையிலுள்ள அஸ்பேர்க் (ASPERG) என்ற இடத்திலிருந்து ஒரு குட்டி முதலாளித்துவ தனி நபர் குழுவினால் வெளியிடப்படும் இலக்கியப் பத்திரிகை "தேனீ" தனது மேமாத வெளியீட்டில் தனது அவதூறுத்தாக்குதலுக்கு நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை தேர்ந்தெடுத்திருக்கின்றது.

இந்தத் தாக்குதல்களின் ஆசிரியர்கள் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் தோற்றுவாயையும், சர்வதேச இணைப்புகளையும் பற்றிய உண்மை நிலைகளை அறிந்திருந்தாலும் அவர்கள் அதனது பெயரை மூடிமறைப்பது சிறந்ததென தேர்ந்தெடுத்ததோடு குட்டி முதலாளித்துவ சேறடிப்பு வாதிகளுக்கே உதாரணமான வகையில் மேற்கு ஜேர்மனியில் வேலை செய்யும் அதனது அங்கத்தவர்களை "குறிப்பிட்ட ஒரு குழுவினர் மட்டும் எந்தப் பத்திரிகைகளிலும் பங்கெடுக்காமல் அல்லது பத்திரிகை எதையும் வெளியிடாமல் 'தொழிலாளர் பாதை' என்னும் பத்திரிகை மட்டும் விற்பனை செய்து கொண்டு ஒரு அரசியல் நடத்தி வருகின்றனர்" எனக் குறிப்பிடுகின்றது.

உண்மையில் "தொழிலாளர் பாதை" புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழுவினது உத்தியோக பூர்வமான பத்திரிகை. இது நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவிற்கு ஆதரவான இந்திய சோசலிச தொழிலாளர் கழகத்தின் பத்திரிகையான 'தொழிலாளர் பாதை' யுடன் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களிடையே விநியோகிப்பதற்காக மேற்கு ஜேர்மனியில் ஒழுங்காக மறுபதிப்பிடப்படுகின்றது.

"தொழிலாளர் பாதை' நான்காவது அகிலத்தின் அனைத்துலக குழுவின் பாட்டாளி வர்க்க சர்வதேசிய நோக்கிற்காக போராடுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமோ, அல்லது நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவோ 'தேனீ' கட்டுரையில் குறிப்பிட்ட "எண்ணம்" பத்திரிகைக்கான ஏதாவது பொறுப்பை எப்போதாவது எடுத்திருக்கவோ, இனிமேல் எடுக்கவோ இல்லை. எண்ணம் பத்திரிகை பு.க.க இலிருந்து முற்று முழுதாக சுயேட்சையாக குட்டி முதலாளித்துவ தேசியவாத நிலைப்பாட்டிற்கு பரிந்து பேசி பல தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாக வெளியிடப்பட்டது. எண்ணத்தின் ஆதரவாளர்களான தனி நபர்கள் குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் வரையறைகளை உணர்ந்து கொண்டு நான்காவது அகிலத்தின் அணியில் இணைந்தால் (ஏனைய விடுதலை இயக்கங்களின் ஆதரவாளர்கள் போல) அது எங்களுடைய சர்வதேசிய அரசியல் முன்னோக்கின் மேன்மையினாலானதுடன் மேலதிக விளக்கங்கள் எதனையும் கட்டாயப்படுத்தவில்லை.

புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின்

அங்கத்தவர்கள் சர்வதேசியவாதிகளாக இருப்பதில் பெருமைப்படுபவர்கள். "NEUE ARBEITER PRESSE" பத்திரிகையை வெளியிடும் நான்காவது அகிலத்தின் ஜேர்மன் பிரிவான சோசலிச தொழிலாளர் கழகத்துடன் (BUND SOCIALISTISCHER ARBEITER) நெருக்கமாக இணைந்து வேலை செய்பவர்கள். உண்மையான வர்க்கப் போராட்டத்திலிருந்து விலகரத்தெடுத்துக்கொண்டு ஊர்க்கதைகளையும், அவதூறுகளையும், ஆத்திரமூட்டல்களையும் பரப்புவதற்கான ஒரே நோக்கத்துடன் 'தேனீ' ஆசிரியர்கள் செய்வதைப் போன்று ஒரு தனித்த தமிழ்ப்பத்திரிகையை பிரசுரிக்க வேண்டிய தேவை ஒன்றும் இங்கு இருக்கவில்லை.

'தேனீ'யின் கட்டுரை ஒரு குவியல் பொய்களும், திரிபுகளும், கறைபூசுதல்களும் தவிர வேறொன்றுமில்லை. மேலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் நோக்கினை தாக்கும் பொருட்டு இந்த வர்க்கப் போராட்டத்தின் அகதிகள் வாழ்வா, சாவா, என்ற போராட்டத்தில் JVP பாசிசவாதிகளுக்கும், பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கும், எதிராக மேற்கொண்டிருக்கும் சிறிலங்காத் தொழிலாள வர்க்கத்திற்கான தங்களது சொந்த அரசியல் நோக்கினை முன்வைக்கவில்லை. இவர்களது நோக்கம் தொழிலாள வர்க்கத்திற்கு தெளிவுபடுத்துவதல்ல. இவர்களது நோக்கம் முழுமையான ஆத்திரமூட்டல் என்பதுடன் ஒவ்வொரு வர்க்க உணர்வுள்ள

தொழிலாளியாலும் நிராகரிக்கப்பட வேண்டும். இது சிறீலங்காத் தொழிலாள வர்க்கத்தையும் பு.க. கழகத்தையும், உடைத்து தூளாக்குவதற்கு முயலும் அதே பிற்போக்கு சக்திகளுக்கு சேவை செய்கிறது.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் சாதனைகள்

புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் களங்கமற்ற புரட்சிகரப்பாதையை கொண்டிருக்கின்றது. 1968ல் தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து சர்வதேச சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்திற்காக தொடர்ந்து போராடுகின்றது. இந்திய உபகண்டம் முழுமைக்குமான சோசலிச இணைப்பின் ஒரு பகுதியாக ஐக்கிய-சோசலிச சிறிலங்கா, தமிழீழக் குடியரசிற்காக அது போராடுகின்றது. இது மாத்திரம் தான் இந்தப் பிராந்தியத்தின் ஏகாதிபத்திய பூலோபாயத்திற்கெதிரான எக்காலத்திலும் சாத்தியமான முன்னோக்காகும்.

இப்போராட்டத்தின் ஒரு பகுதியாக அது எப்பொழுதும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக விசேடமாக தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும், தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை வென்றெடுப்பதற்காகவும் தயக்கமின்றி போராடுகின்றது. ஜூலை 1979ல் தமிழ் எதிர்ப்பு இனவாத தாக்குதல் அலையின் மத்தியில் சுயநிர்ணயத்திற்கான தமிழரின்

www.padippakam.com



உரிமையை பாதுகாத்ததிற்காக புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் ராஜாங்கனை பகுதி அமைப்பாளர் தோழர் R.P. பியதாச யூ.என்.பி. அரசாங்கத்தின் குண்டர்களால் கொல்லப்பட்டார்.

ஆனால் சுயநிர்ணயத்திற்கான உரிமையை தொடர்ந்து பாதுகாத்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் பு.க. கழகம் - தேசிய விடுதலை இயக்கங்களின் முதலாளித்துவ வேலைத்திட்டம் இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு சக்தியற்றது என்பதுடன் அவர்களது வரையறைகளைப் பற்றிய எச்சரிக்கைகளையும் எப்பொழுதும் வலியுறுத்தி வந்தது. அதிகாரத்தை தனது சொந்தக் கரங்களில் கைப்பற்றுவதன் மூலம் தொழிலாள வர்க்கம் மட்டும் தான் ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வழங்கும் ஆற்றலுடையது.

இந்த முன்னோக்கின் சரியான தன்மை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தேசிய விடுதலை இயக்கங்களின் தலைமைகளின் அரசியல் வங்குரோத்தினால் பலமாக உறுதி செய்யப்பட்டது. அவர்கள் 1987ல் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தை "ஜனநாயகத்திற்கு" கிடைத்த வெற்றியென வாழ்த்தினர். புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் மட்டும் தான் உலக ஏகாதிபத்தியத்தினதும், இலங்கை, இந்திய முதலாளித்துவத்தினதும் எதிர்ப்புரட்சி சதி அது என்பதனை அம்பலப்படுத்தியிருந்தது.

தற்பொழுது L.T.T.E. தனது அரசியலை தலைகீழாக மாற்றி பிரேமதாசாவின் அரசாங்கத்துடன் ஒரு கூட்டை உருவாக்கி "அனைத்து சமூகங்களும் குழுக்களும் ஜனாதிபதியைச் சுற்றி அணிதிரளுமாறு" அழைப்பு விடுகின்றது. இது தேசிய சுயநிர்ணய உரிமை வேலைத்திட்டத்தை முழுமையாக நிராகரிப்பதற்கு சமமானது. தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை நாற்பது வருடங்களாக எதிர்த்து வந்த சிங்கள முதலாளித்துவத்தின் மோசமான இனவாதப் பிரதிநிதியை சிறீலங்காவின் நியாயபூர்வமான ஜனாதிபதியென L.T.T.E. யானது அங்கீகரிக்கின்றது.

சிறீலங்காவின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களினதும் விடிவிற்கான ஒரே வழி தொழிலாள வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். ஆயினும், இதற்கு தொழிலாள வர்க்கத்தினுள் ஒரு புதிய புரட்சிகர தலைமையை உருவாக்குவதுடன், தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ ஆட்சிக்கு கீழ்ப்படுத்திய துரோக தலைமைகள் தொழிலாளர் இயக்கத்திலிருந்து விரட்டப்படுவதும் கட்டாயமாகின்றது. பல வருடங்களாக L.S.S.P. C.P. N.S.S.P, C.W.C தலைவர்கள் வழங்கிய ஆதரவில்லாமல் இன்று பிரேமதாசா அதிகாரத்தில் இருந்திருக்க முடியாதென்பதை சிந்திக்கக் கூடிய தொழிலாளி ஒருவர் கூட சந்தேகப்படமாட்டார். 1986ல் அவர்கள் ஜெயவர்த்தனவுடன் வட்ட மேசை பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். 1987ல் எதிர்ப்புரட்சி இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவாக ஒன்று கூடினர்.

"தேனீ" கட்டுரையின் ஆசிரியர்கள் பரிதாபகரமாக இந்த துரோகிகளை திரை போட்டு மறைப்பதற்கு முயல்கின்றனர். அவர்களை இடது சாரிகள் என வர்ணிக்கும் இவர்கள் நாம் அவர்களை விமர்சித்ததற்கு பு.க. கழகத்தை தாக்கி இப்படி கூறுகின்றார்கள் "ஜே. ஆர், பிரேமதாசா போன்ற கும்பல்களை இவர்கள் திட்டுவதை விட இடதுசாரிகளை திட்டித்தீர்ப்பது இவர்களது பாரம்பரியமான கலையாக இருக்கின்றது" அவர்களை அவர்களது சொந்தப் பெயரால் பு.க. கழகம் அழைக்கும் உண்மையைக் கண்டு அவர்கள் மூர்க்கம் கொள்கின்றனர்: "ஸ்டாலினிஸ்டுக்கள், ஏகாதிபத்தியக் கைக்கூலிகள், பப்லோவாதிகள், திரிபுவாதிகள் வார்த்தைகளை கைவசம் வைத்துக் கொண்டு இடது சாரிகளை திட்டித்தீர்த்துக் கொள்கிறார்கள்." L.S.S.P துரோகங்களை மூடிமறைக்கும் முயற்சியில் பப்லோவாதம் என்றால் என்னவென்று பு.க. கழக அங்கத்தவர்களுக்கு தெரியாது என்று கூட அவர்கள் பரிகசிக்கத் தக்கவாறு உரிமை கொண்டாடுகின்றார்கள்! உண்மையில் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் முழு வரலாறும் பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்துடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

நான்காவது அகிலத்தின் சுயாதீனமான தொழிலாள வர்க்க கட்சிகளை கட்டியெழுப்புவது, இனியும் தேவையானது இல்லை என வெளிப்படுத்திய நான்காம் அகிலத்தின் அன்றைய செயலாளரான மைக்கல் பப்லோவின் தலைமையில்

1953ல் நான்காவது அகிலத்திலிருந்து பிரிந்து சென்ற சர்வதேச அரசியல் போக்கினை நாங்கள் "பப்லோவாதிகள்" என விபரிக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட நாட்டில் மக்கள் இயக்கத்தில் தற்காலிகமாக அதிகாரம் செலுத்தும் ஏதாவது சக்திகளுக்கு ஏற்றபடி நான்காவது அகிலத்தின் பிரிவுகளை மாற்றியமைக்க பப்லோவாதம் கட்டாயப்படுத்தியது. இவைகளுள் L.S.S.P. 1964ல் தனது பிற்போக்கு தீர்மானங்களுக்கு பப்லோவாத வேலைத்திட்டத்தைக் காவிச் சென்று முதலாளித்துவ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் இணைந்தது. இது L.S.S.P யின் ஆதரவுடன் 1971ல் J.V.P யின் எழுச்சியை அடித்து நொருக்குவதற்காக 15,000 கிராமப்புற இளைஞர்களை படுகொலை செய்வதற்கு வழி வகுத்ததுடன், L.S.S.P யின் பூரண ஆதரவுடன் தமிழர் எதிர்ப்பு இனவாத அலைக்கான பாதையையும் திறந்து விட்டது. L.S.S.P. முதலாளித்துவத்திற்கெதிராக போராடிக்கொண்டிருந்த ஒரு நேரத்தில் தொழிலாள வர்க்கத்தை தங்களது பிரச்சனைகளின் தீர்வுக்காக பார்த்திருந்த தமிழ் மக்கள் தற்போது தேசிய விடுதலை ஸ்தாபனங்களை உருவாக்குவதையும், ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ளுவதையும் தவிர்ந்த வேறு தீர்வுகளை காணவில்லை. அத்துடன் இன்று முதலாளித்துவத்தால் அடித்து நொருக்கும் இயந்திரமாக தொழிலாள வர்க்கத்திற்கெதிராக பாவிக்கப்படும் J.V.P. யின் வளர்ச்சி L.S.S.P துரோகத்தின் விளை-

படிப்பகம்

www.padippakam.com



வாகும். L.S.S.P முதலாளித்துவ அரசுப் பக்கப் பாதையை நோக்கியதால் தரித்திர நிலையிலிருந்த கிராமத்து இளைஞர்கள் தொழிலாள வர்க்கத்தில் நம்பிக்கையிழந்து குட்டி முதலாளித்துவ J.V.P பக்கம் திரும்பினர்.

L.S.S.P யின் துரோகங்களுக்கெதிராக சமாதானப்படுத்த முடியாத போராட்டத்தின் பாடங்கள் அனைத்தையும் அகழ்ந்தெடுத்து நான்காவது அகிலத்தின் சர்வதேசிய பாட்டாளி வர்க்க வேலைத்திட்டத்திற்கு ஆதரவாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோற்றுவிக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்டது. பு.க.கழகம் இணைந்துள்ள நான்காவது அகிலத்தின் "அனைத்துலக குழு" பப்புலோ வாதத்திற்கெதிராக போராடுவதற்காக 1953ல் தோற்றுவிக்கப்பட்டது.

## ஐக்கிய முன்னணிப் பிரச்சாரம்

சிறீலங்காவில் இன்று பு.க. கழகம் மாத்திரம் தான் ஒரே ஒரு அரசியல் கட்சி அரசபடைகளினதும், J.V.P பாசிச வாதிகளினதும் இணைந்த தாக்குதலுக்கெதிராக சுயாதீனமான போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தினை ஐக்கியப்படுத்தவும், அணிதிரட்டவும் போராடுகின்றது. சிறீலங்காவின் முதலாளித்துவம் உலக முதலாளித்துவத்தின் கட்டுடைப்புடன் மோசமாகி வரும் உலக பொருளாதார நெருக்கடியின் நாசகரமான தாக்கத்தை தொழிலாள வர்க்கத்தின் மேல் திணித்து அது கடந்த காலங்களில் வென்றெடுத்த வரையறுத்த லாபங்கள் எதுவாகிலும் அதனை அழித்து விடும் நோக்கில் பாசிச - இராணுவ சர்வாதிகாரம் ஒன்றை அதிகாரபூர்வமாக திணிப்பதற்கு பெரும் முயற்சி எடுக்கின்றது. ஆனால் இது வரையும் தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்பினை உடைப்பதற்கு அது வக்கில்லாததாக இருக்கின்றது. ஆதலால் தான் வடக்கின் தமிழ் விடுதலைப் போராட்டத்தை நொருக்கமுடியாமல் போனதுடன் தெற்கிலும் நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஜெயவர்த்தன இந்திய ஏகாதிபத்திய பொலிஸ்காரனை வரவழைத்தார். ஆனால் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் கூட தோல்வியடைந்தது. L.T.T.E ன்சமாதானப்படுத்தும் பங்களிப்பு இருந்தாலும் கூட இந்திய இராணுவம் தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முடியாமல் போனதுடன், தெற்கின் தொழிலாள வர்க்கம் தனது வாழ்க்கைத்தரத்தை பாதுகாப்பதற்காக சக்திவாய்ந்த வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

இது தான், சிங்கள முதலாளித்துவம் பகிரங்கமாக தனது பாசிச சீட்டை விளையாடுவதற்கான காரணமாகும். தொழிலாள வர்க்கத்தை பயமுறுத்தி பணிய வைக்கவும், தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களை அழித்தொழிப்பதற்குமாக அது J.V.P ஐ அணிதிரட்டியுள்ளது. கடந்த மாதங்களில் அவர்களது அச்சுறுத்தல்களை தைரியத்துடன் எதிர்த்த பு.க. கழகத்தின் மூன்று அங்கத்தவர்களான தோழர்கள் R.A. பிட்டாவெல, P.H. குணபால, கிரசான் கீக்கியானகே, உட்பட்ட எண்ணிக்கையற்ற தொழிலாளர்களையும், தொழிலாள வர்க்கத் தலைவர்களையும், J.V.P. கொலை செய்திருக்கிறது.

தொழிலாள வர்க்கத்திற்கெதிரான J.V.P. யின் அச்சுறுத்தல்கள் அரச படைகளின் அச்சுறுத்தல்களால் பூரணப்படுத்தப்படுகின்றது. வேலை செய்வதை நிறுத்தாவிடில் தொழிலாளர்களை கொலை செய்யப் போவதாக பயமுறுத்தும் அதே வேளையில் இராணுவம், அவர்கள் வேலைக்கு திரும்ப போகாவிடில் கொலை செய்யப் போவதாக பயமுறுத்துகிறது. ஏதாவது தற்காலிகமான மோதல்கள் இராணுவத்திற்கும், J.V.P க்கும் இடையில் நடைபெற்றால், அவை எதிர்கால பாசிச அரசாங்கத்திற்கான சக்திகளின் சமநிலையைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கே சேவை செய்கின்றன. அணிதிரட்டப்பட்ட தொழிலாள வர்க்கத்தை சிதைப்பதன் தேவையில் அங்கே U.N.P. அரசுக்கும், அதனது அரச படைகளுக்கும், J.V.P க்குமிடையில் முழுமையான உடன்பாடு இருக்கின்றது.

உலகப் பொருளாதார நெருக்கடியின் பேரழிவுத் தாக்குதல்களின் கீழ் இரண்டு மாற்று வழிகள் மாத்திரம் தான் சிறீலங்காவின் எதிர் காலத்திற்கு இருக்கின்றது. முதலாவது J.V.P. பாசிச வாதிகளும், அரச படைகளும், தொழிலாள, வர்க்கத்தை நிர்மூலமாக்குவதில் வெற்றியடைந்து, இரத்தம் தோய்ந்த சிலி நாட்டுப் பாணியிலான சர்வாதிகாரத்தை நிர்மாணித்து பத்தாயிரக் கணக்கான தொழிலாளர்களை படுகொலை செய்து, சுரண்டலை மிகவும் உச்சக்கட்டத்திற்கு அதிகரித்து ஏகாதிபத்திய வங்கிகளின் தேவைகளை நிறைவேற்றுவது. இது பிரேமதாசாவிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் உள்ள தற்காலிகமான உடன்பாடுகள் எதுவாக இருந்தாலும் கூட தவிர்க்கமுடியாதபடி தமிழர்களுக்கெதிரான மிருகத்தனமான பயங்கரவாதத்தையும் உள்ளடக்கும்.

இரண்டாவது, தொழிலாள வர்க்கம் தனது பாதுகாப்பை ஒழுங்குபடுத்தி தாக்குதல்களுக்கு இறங்கி பாசிச வாதிகளையும், முதலாளித்துவ அரசையும், நொருக்கி அதிகாரத்தை தனது சொந்தக் கரங்களுக்குள் எடுப்பது. இதைச் செய்வதற்காக அது இந்தியாவிலும், உலகம் முழுவதிலும் உள்ள தனது வர்க்க சகோதரர்களுடன் ஐக்கியப்பட வேண்டும். இந்தப் போராட்டத்தில் அது ஏழை விவசாயிகளை தனது பக்கம் வென்றெடுக்கும். அது தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வழங்கும். அனைத்து வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவ சொத்துக்களை தேசிய மயமாக்கி பொருளாதாரத்தை திட்டமிட்ட வகையில் ஒழுங்குபடுத்தும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தவிர்ந்த தொழிலாள வர்க்க இயக்கத்துள் உள்ள ஏனைய அனைத்து அரசியல் போக்குகளும் பாசிச பயமுறுத்தல்களுக்கு நிபந்தனையின்றி சரணடைந்து விட்டார்கள். அவர்கள் ஒன்றில் N.S.S.P ஐ போல் J.V.P யின் பாசிச தாக்குதலுக்குத் தக்கவாறு

படிப்பகம்

www.padippakam.com



தங்களை மாற்றியமைத்து விட்டார்கள் அல்லது, L.S.S.P ஐ போல் எதிர்ப்புரட்சி அரச படைகளுக்கு ஆதரவளிக்கின்றார்கள்.

பாசிச இராணுவமிரட்டல்களுக்கெதிராக புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் அனைத்து தொழிலாள வர்க்க ஸ்தாபனங்களதும் ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விட்டதுடன் தீவிரமாக அணிதிரட்டியும் வருகின்றது. அது இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக அனைத்து தொழிலாள வர்க்க அரசியல் கட்சிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும், பின்வருமாறு அழைப்பு விட்டுள்ளது:- வேலைத்தலங்களிலும், தொழிலாள வர்க்க குடியிருப்புக்களிலும், இணைந்து பாதுகாப்பு படைகளை ஒழுங்கு படுத்துவது, இணைந்த மறியல் போராட்டங்களையும், ஊர்வலங்களையும், ஒரு பொது வேலை நிறுத்தத்தையும் ஒழுங்கு செய்வது.

புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான பிரச்சாரம் சிறீலங்கா, சர்வதேச தொழிலாள வர்க்கத்தினது பாரிய ஆதரவினைப் பெற்றுள்ளது. அதனை L.S.S.P, C.W.C N.S.S.P, D.W.C தலைவர்கள் முழுமையாக நிராகரித்த போதும் இக்கட்சிகளின் முக்கியமான கிளைகளும், தொழிற்சங்க உள்ளூர் அமைப்புகளும் அதற்கு ஆதரவளிக்கின்றன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான அழைப்பிற்கு பின் வரும் அமைப்புகள் உத்தியோகபூர்வமாக ஆதரவு தெரிவிக்கின்றன.

1. இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கம்.
2. சிறீலங்கா உள்நாட்டு வருமான சேவைகள் சங்கம்
3. லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கியமான ஒரு உள்ளூர் கிளை,
4. இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் ஐக்கியமான ஐக்கிய தேயிலை, றப்பர் உள்நாட்டு உற்பத்தி தொழிலாளர் சங்கம் (UTR LPWU) கெலிசா கிளை மாதம்பை.
5. இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் ஐக்கியம் கொண்ட (UTR, LPWU ரவி-கிளை (ருகம).
6. கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம் அம்பலாங்கொடைக் கிளை.
7. அகில இலங்கை வர்த்தக கைத்தொழில் தொழிலாளர் கிளை ஓர்க்கார்ல் பில்லிங் கிளைச் சங்கம்
8. நவசமாஜக் கட்சி சிறுபான்மைப் பிரிவு.
9. அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி ஒருவர்.
10. வர்த்தக கைத்தொழில் சங்கம்.
11. லிவர் பிரிவு மாதம்பை.

இந்தியா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, மேற்கு ஐரோப்பாவிலிருந்து, சர்வதேச ரீதியாக பத்தாயிரக்கணக்கான தொழிற்சங்கவாதிகளிடமிருந்து பு.க. கழகத்தின் பிரச்சாரத்திற்கு ஆதரவு கிடைத்திருக்கின்றது.

## ஐக்கிய முன்னணிப் பிரச்சாரத்தின் மேல் தேனீயின் தாக்குதல்

இந்த பாரிய ஆதரவு தான் தொழிலாள வர்க்க எதிர்ப்பு தேனீ ஆசிரியர்களுக்கு பெரும் ஆத்திரமூட்டி பு.க. கழகத்தின் மீதான தாக்குதலைக் கிளறி விட்டிருக்கிறது. பாசிச பயமுறுத்தலுக்கெதிராக எப்படி தொழிலாள வர்க்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று தங்களது சொந்த வேலைத்திட்டம் எதையும் முன்வைக்காமல் பு.க. கழகத்தின் பிரச்சாரத்தைப் பற்றி முடிந்தளவு பொய்களையும், திரிபுகளையும், அதனைத் தாக்கிக் கிழிப்பதற்காக உற்பத்தி செய்கின்றனர். உண்மையில் அவர்கள் பூரணமாக தொழிலாள வர்க்கம் J.V.P பாசிசவாதிகளாலும், இராணுவத்தாலும் கட்டாயமாக நிர்மூலமாக்கப்பட வேண்டுமென்பதை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்கின்றனர்.

முதலில் அவர்கள் கூறுகிறார்கள் "இவர்கள் (பு.க. கழகம்) அமைக்க இருப்பது இடது சாரிக்கட்சிகளின் ஐக்கிய முன்னணியா, அல்லது தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய முன்னணியையா என்பது புரியவில்லை. ஏனென்றால் லங்கா சமசமாஜக்கட்சியும், மற்றைய கட்சிகளும் தம்மைத் தொழிலாள வர்க்கத் தளம் கொண்ட கட்சிகள் என அழைத்துக் கொள்கின்றனர். ஆனால் அவை தொழிலாள வர்க்கத்தை உள்ளடக்கிய கட்சிகளல்ல என்பதை இவர்கள் அறியாமல் இருப்பது புதினமே".

இந்தக் கட்சிகளின் தலைவர்களை விமர்சித்ததாக எங்களின் மேல் தாக்குதல்களை நடாத்திய பின்னர் இவர்கள் தொழிலாள வர்க்கத்திடம் இக்கட்சிகளுக்கு அடித்தளம் இல்லையென இப்போது உரிமை கொண்டாடுகின்றார்கள். இது சந்தேகமில்லாமல் முழுமையான பொய். முழுமையான முதலாளித்துவ அரசியல் போக்கினை பின்பற்றினும் L.S.S.P, C.P; S.L C.W.C. D.W.C, N.S.S.P ஆகியவை உண்மையில் தொழிலாள வர்க்கத்திடம் அடித்தளம் கொண்டவை. , தொழிலாள வர்க்கம் வேறுபாடான அரசியல் கட்சிகளுக்குள் பிளவுண்டு இருக்கின்றது என்ற இந்த சரியான உண்மையிலிருந்து தான் ஐக்கிய முன்னணி ஒன்றிற்கான தேவை எழுகின்றது. தொழிலாள வர்க்கம் தனக்குள் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் வரை உடனடிப் பாசிசத்தாக்குதல்களுக்கெதிராக தன்னைப் பாதுகாப்பதற்கு தாமதித்து நிற்க முடியாது. இருக்கும் அரசியல் வேறுபாடுகளைக் கருத்தில் எடுக்காமலும், அவற்றை மூடிமறைக்காமலும் உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் வற்புறுத்துகின்றது. இருக்கும் தொழிலாள வர்க்கக் கட்சிகளுக்கு அறிவித்தல் கொடுக்காமல், ஐக்கிய முன்னணிக்காக அழைப்பு விடுதல் இந்தக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் தொழிலாளர்களுக்கு நீங்கள் உங்களுடைய கட்சிகளிலிருந்து முதலில் பிரிந்து வந்தால் தான் உங்களுடைய பாதுகாப்பை நாங்கள் ஒழுங்கு செய்ய

படிப்பகம்

www.padippakam.com



முடியும் என நம்பங்களை விதிப்பதற்கு சமமாகும்.

உலக வரலாற்றில் தொழிலாள வர்க்கத்திற்கேற்பட்ட மிகவும் நாசகாரமான தோல்விக்கு வழி வகுத்த இந்தக் கொள்கை தான் தற்பொழுது தேனியால் முன் வைக்கப்படுகிறது. ஒரு ஐக்கிய முன்னணிக்கு போராட ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மறுத்ததால் கிட்லர் பதவியை கைப்பற்ற முடிந்ததுடன் 1933ல் ஜேர்மன் தொழிலாள வர்க்கமும் தோல்வியடைந்தது. சமூக ஜனநாயக வாதத்திற்கு ஆதரவளித்துக் கொண்டிருந்த மில்லியன் கணக்கான தொழிலாளர்களுக்கு அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிலாளர்களுடன் இணைந்து பாசிசத்திற்கு எதிராக இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னர் தங்களது கட்சியிலிருந்து பிரிந்து வரவேண்டும் என ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி கூறியது. அவர்கள் S.P.D. க்கும், பாசிஸ்டுக்களுக்குமிடையில், ஒரு வித்தியாசமும் இல்லை என அறிவித்ததுடன், L.S.S.P தொடர்பாக 'தேனீ' செய்வதைப் போல். S.P.D க்கு தொழிலாளவர்க்க அடித்தளம் இருந்ததை அலட்சியம் செய்தனர் இந்த வழியில் தொழிலாளவர்க்கத்தைப் பிரித்து கிட்லருக்கு வழி திறந்து விட்டனர். அந்த நேரத்தில் ரொக்சி (TROTSKY) நிறுவிக் காட்டிய மாதிரி தீவிர இடதுசாரி வார்த்தை ஜாலங்களுக்கு பின்னால் பாசிசத்திற்கெதிராக உண்மையான போராட்டத்தை முன்னெடுக்க மறுத்த தங்களது சொந்த கோழைத்தனத்தையே மறைத்தார்கள்.

தேனீ செய்வதைப் போல் "இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய முன்னணியை" "தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய முன்னணிக்கு" சமப்படுத்துவது முழுமையாக தவறானது. தொழிலாள வர்க்க கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட ஐக்கிய முன்னணிக் கோரிக்கை நடவடிக்கையானது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை முழுத்தொழிலாள வர்க்கத்திற்கும், அதனது முழு ஸ்தாபனங்களுக்கும், பிரச்சாரம் செய்வதை தடுக்கவில்லை. இது தொழிற்சங்கங்களிடையே இது வரை நாங்கள் பெற்றிருக்கும் ஆதரவினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. உண்மையில் அனேகமான தொழிலாளவர்க்க தலைவர்கள் பிடிவாதமாக ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிக்க மறுப்பது, தொழிலாளர்களை இத்தலைவர்களினது துரோகத்தனமான பங்களிப்பை புரிந்து கொண்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைவதற்கு உதவி செய்யும்.

## தமிழ் சுய நிர்ணய உரிமையின் மீது

## தேனீயின் தாக்குதல்

தேனீ பின்னர் தொடர்ந்து தாக்குகிறது: " இன்று வடக்கிலும் கிழக்கிலும் தொழிலாளர்களை ஐக்கிய முன்னணிக்குள் கொண்டு வரும் நோக்கங்கள் இல்லாதளவுக்கு இவர்களை பேரினவாதம் பற்றிக் கொண்டு விட்டதா ? ஆம் இதைச் சந்தேகிக்க இடமிருக்கிறது 4ம் பக்கத்தில் (தொழிலாளர் பாதையின்) பிரசுரித்த கடிதத்தில் (பந்தி 14) கொலை செய்யப்பட்ட தொழிற்சங்கவாதிகளான விஜயானந்தன் அன்னமலை, வணசிங்கா, ஆகியோரைப்பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. J.V.P யினால் கொலை செய்யப்படும் அரசியல் வாதிகள், தொழிற் சங்கவாதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், நிர்வாகத்தடைகள் பற்றி குறிப்பிடும் இவர்கள் மேற்குறிப்பிட்டவை யாவும் வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறுவதை காண மறுக்கிறார்களா ? இவற்றுக்கிடையில் என்ன வேற்றுமையை தொழிலாளர் பாதை காண விரும்புகிறது"

தொழிலாளர் பாதை

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணி திரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் "தொழிலாளர் பாதை" மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

தொழிலாளர் பாதைக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.

தேனியால் குறிப்பிடப்பட்ட தொழிற்சங்க தலைவர்களின் கொலைகள் பகிரங்கமாகவும், வன்மையாகவும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தால் கண்டிக்கப்பட்டதை முதலில் கட்டாயமாக குறிப்பிட வேண்டும் (தொழிலாளர்பாதை இலக்கம் 385 திகதி 15.7.88 , இதழ் 390 திகதி 30.1. 89,) ஆனால் தேனீ உண்மையில் இந்த தொழிற் சங்க தலைவர்களின் கொலைகளை கவனத்திலெடுத்துக் கொள்ளவில்லை. ஐக்கிய முன்னணியானது U.N.P அரசபடைகளுக்கும், J.V.P. யிற்கும் எதிரான திசையில் மட்டுமல்ல, ஆனால் L.T.T.E க்கும் எதிராக திருப்பப்பட வேண்டும் என்பதையே தேனீ உண்மையில் முன் வைக்கின்றது அவர்கள் குட்டி முதலாளித்துவ விடுதலை இயக்கமான L.T.T.E யினை பாசிச J.V.P யுடன் அடையாளம் காண முயல்கின்றனர்.

L.T.T.E யின் முதலாளித்துவ வேலைத்திட்டத்துடன் எங்களுக்கிருக்கும் அடிப்படை அரசியல் வேறுபாடுகளை ஏற்கனவே நாங்கள் மேலே குறிப்பிட்டிருக்கின்றோம். தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை பெறுவதற்கு இந்த வேலை திட்டத்தினால் முடியாது என்பதை தொடர்ந்து பு.க. கழகம் தொழிலாள வர்க்கத்தை எச்சரிக்கை செய்து வந்துள்ளது. நாங்கள் குட்டி முதலாளித்துவ விடுதலை இயக்கங்களிலிருந்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்திற்காக போராடுகின்றோம். இந்த இயக்கங்களின் தாக்குதல்களுக்கெதிராக தொழிலாள வர்க்கத்தை பாதுகாப்பதற்கு நாங்கள் தயங்கப் போவதில்லை.

இருந்தும் L.T.T.E. உருவாகுவதற்கு வழி வகுத்த ஜனநாயக கோரிக்கையான தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையின் நியாயபூர்வத்தையும், புரட்சிகர குணம்சத்தையும் எப்பொழுதும் அங்கீகரித்திருக்கின்றோம். இதற்கு மாறாக J.V.P 1945ல் ஏகாதிபத்தியத்தால் இந்திய உபகண்டத்தில் தனது ஆதிக்கத்தை பாதுகாப்பதற்கு அரியாசனத்தில் அமர்த்திய சிங்கள ஒற்றையரசையும், முழு அரசியல் அமைப்பு முறையும் பாதுகாப்பதற்கான மிகவும் பிற்போக்குத்தனமான வேலைத்திட்டத்திற்காகப் போராடுகின்றது. L.T.T.E க்கும் J.V.P க்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை தெளிவற்றதாக செய்வதனால் தேனீ ஒடுக்கப்படும் தமிழ்த் தேசத்திற்கும், சிங்கள ஒடுக்கும் தேசத்திற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை மங்கலாக்குவதற்கு சேவை செய்கிறது. வேறு வார்த்தைகளில் அவர்கள் முதலாளித்துவ ஒற்றை அரசை பாதுகாப்பதற்கான போர்வையொன்றை வழங்குவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

J.V.P. யினால் மேற்கொள்ளப்படும் "நிர்வாகத்தடைகளைப்பற்றி' புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் கவனத்திலெடுப்பதாகும் அவர்களது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது. இது இன்னுமொரு பொய், தேனீயைப் போன்று புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் அது தூக்கியெறிய இலக்கு வைத்திருக்கும் முதலாளித்துவ ஒற்றை ஆட்சி முறையின் "நிர்வாகத் தடைகளைப் பற்றி" அல்ல, ஆனால் தொழிலாள வர்க்கத்திற்கும், அதனது ஸ்தாபனங்களுக்கும் எதிரான அச்சுறுத்தல்களைப்பற்றியே கவனத்திலெடுத்துக் கொண்டுள்ளது.

நாங்கள் தேனீயின் ஆத்திரமூட்டல்களை நிராகரிக்கும்படி ஒவ்வொரு தமிழ் தொழிலாளிக்கும் வேண்டுகோள் விடுவதுடன், நான்காவது அகிலத்தின் சர்வதேச குழுவினதும் அதனது இலங்கைப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் போராட்டத்தில் இணையுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
BUND SOZIALISTISCHER ARBEITER.
POST- FACH - 100105
4300 ESSEN. 1

படிப்பகம்

www.padippakam.com

Veranstaltung des Bunds Sozialistischer Arbeiter

# Leo Trotzki

## 49 Jahre seit seiner Ermordung durch Stalin



*Leo Trotzki*

**Sonntag, 29. Oktober, 16 Uhr**

**Frankfurt**

**Volksbildungsheim (kleiner Saal)**
**Eschenheimer Anlage 4′**

## Subscribe to:

**தொழிலாளர் பாதை**

The Tamil language paper of the Revolutionary Communist League, Srilankan section of the International Committee of the Fourth International, and experpts from the paper of the Socialist Labour League (India), which is in sympathy with the ICFI, are regularly reprinted for distribution in Europa.

**Have it posted** **20 issues: DM 26.-**

**Write to Neue Arbeiterpresse, Postfach 100 105, D - 4300 Essen 1, West Germany**

**Subscription payable to accont Neue Arbeiterpresse (Bettina Rippert), No. 211 85 - 431, Postgiroamt Essen (effected at any post office)**


# Fourth International

A JOURNAL OF INTERNATIONAL MARXISM PUBLISHED BY THE INTERNATIONAL COMMITTEE OF THE FOURTH INTERNATIONAL

**Now available: Volume 15, Nos. 3-4 (July-December 1988)**

**Contains:**

- *The World Capitalist Crisis and the Tasks of the Fourth International.* Perspectives Resolution of the International Committee of the Fourth International.
- Gorbachev and the Soviet Union
- The 1992 European Internal Market
- Sri Lanka and the Assassination of Comrade R.A.Pittawala
- The Cases of Patrick Slaughter and Mark Curtis





Also available in German (DM 10.- per issue)

**Subscription rates:**

| | | |
|---|---|---|
| US | 1 issue | $ 8.00 |
| | 1 year (4 issues) | $ 30.00 |
| Europe, Latin America | 1 issue | $ 10.00 |
| | 1 year (4 issues) | $ 40.00 |
| India, Asia, Africa, Australia | 1 issues | $ 12.00 |
| | 1 year (4 issues) | $ 45.00 |

**Labor Publications, Inc., P.O.Box 33023, Detroit, MI 48216**




*This pamphlet can be ordered from*

***Neue Arbeiterpresse***
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West-Germany*

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

Please pay DM 1,50 + DM 0,50 postage to account no. 211 85 – 431, Postgiroamt Essen

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்